<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வித் துறை – திருக்குறளில் உள்ள நூற்றி ஐந்து அதிகாரங்களை ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கான நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் வழியாகப் பயிற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வித் (ERT) துறை</u>

அரசாணை (நிலை) எண். 51

நாள்: 21.03.2017
திருவள்ளவர் ஆண்டு – 2048
துன்முகி வருடம், பங்குனி – 8
படிக்கப்பட்டவை:

1. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.11999/2015, தீர்ப்பாணை நாள் 26.04.2016.
2. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.054478/திவ2/இ2/2016 நாள் 09.05.2016 மற்றும் 23.02.2017.
3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் கடித ந.க.எண்.616/ஈ2/2015, நாள் 16.02.2017.

----

<u>ஆணை:–</u>

உலக இலக்கியச் செழுமைக்கு தமிழ்மொழியின் மிகச் சிறந்த கொடையாகக் கருதப்படுவதும், நன்னெறிக் கருத்துக்களுடன் வாழ்வியல் நெறிகளையும் இணைத்து செதுக்கப்பட்ட அறிவுக் கருவூலமாம் “திருக்குறள்” ஏற்கெனவே தமிழ் மொழிப்பாடத்தில் தேவைக்கேற்ப முதல் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை உரிய அளவில் கற்பிக்கப்படுகிறது.

2. இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் திரு.இராஜரத்தினம் என்பவரால் திருக்குறளில் உள்ள 1330 குறள்களையும் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள பாடத்திட்டத்தில் கொண்டு வர வேண்டும் எனத் தொடரப்பட்ட பொது நல வழக்கு எண்.11999/2015ல் மாண்பமை உயர்நீதிமன்றம் தனது 26.04.2016–ம் நாளிட்ட தீர்ப்பில், கல்வியின் முதன்மைக் குறிக்கோளே நன்னெறிக் கருத்துக்களின் அடிப்படையில் கட்டமைக்கப்படும் சமூகம் என்பதால் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் அறத்துப்பால் மற்றும் பொருட்பால் இரண்டையும் பாடத்திட்டத்தில் சேர்த்திட உரிய நடவடிக்கை எடுத்திட அரசுக்கு ஆணையிட்டது.

3. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை பிறப்பித்த ஆணையினை நடைமுறைப்படுத்திடும் வகையில் உரிய நடவடிக்கைகளை எடுத்திட பள்ளிக் கல்வி இயக்குநரும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநரும் அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

4. மேலே இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில் திருக்குறளில் உள்ள நூற்றி எட்டு அதிகாரங்களையும், ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள பாடத்திட்டத்தில் சேர்ப்பது தொடர்பாக மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு தனது ஆய்வின் அடிப்படையில் இன்பத்துப்பாலிலுள்ள இருபத்து ஐந்து அதிகாரங்கள் நீங்கலாக, அறம் மற்றும் பொருட்பாலிலுள்ள நூற்றி எட்டு அதிகாரங்களிலுள்ள அனைத்துத் திருக்குறள்களையும் ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் வயது மற்றும் வகுப்பைக் கணக்கீடு செய்து அதற்கேற்றவாறு நன்னெறிக் கல்விக்கான திருக்குறள் பாடத்திட்டத்தினை வகுத்துள்ளது என்றும், அவ்வல்லுநர் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நன்னெறிக் கல்விக்கான திருக்குறள் பாடத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவானது அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், வல்லுநர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 'நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தில்' மாணவப் பருவத்தில் கற்பிக்க வேண்டிய திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் அறம் மற்றும் பொருட்பாலில் உள்ள நூற்றி ஐந்து அதிகாரங்களை (இணைப்பில் கண்டுள்ளவாறு) வகுப்பு வாரியாக பதினைந்து அதிகாரங்கள் என்ற முறையில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் வரும் கல்வியாண்டிலிருந்து (2017–18) பயிற்றுவிக்க அரசு ஆணையிடுகிறது.

6. உலகப் பொதுமுறையாம் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துக்களின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழர்களைச் சென்றடையும் விதமாக இணையவழி திருக்குறள் வளங்களை அவ்வப்போது நவீனமுறையில் உருவாக்கி, உடனுக்குடன் பதிப்பித்து வெளியிட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநரும் தமிழ்நாட்டுப் பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண் இயக்குநரும் பணிக்கப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.உதயச்சந்திரன்
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை –6.
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவன இயக்குநர், சென்னை–6.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை–6.

<u>நகல்</u>
மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. செந்தமிழ்செல்வி
பிரிவு அலுவலர்.

21/3/17

## இணைப்பு

## நன்னெறிக் கல்வி பாடத்திட்டம் – திருக்குறள் அதிகாரங்களின் பட்டியல்

| வ. எண் | ஆறாம் வகுப்பு | ஏழாம் வகுப்பு | எட்டாம் வகுப்பு | ஒன்பதாம் வகுப்பு | பத்தாம் வகுப்பு | பதினோராம் வகுப்பு | பன்னிரண்டாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடவுள் வாழ்த்து (1) | அழுக்காறாமை (17) | நடுவுநிலைமை (12) | பொறையுடைமை(16) | ஒழுக்கமுடைமை (14) | அடக்கமுடைமை (13) | இல்வாழ்க்கை(5) |
| 2 | வான் சிறப்பு (2) | புறங்கூறாமை (19) | கூடா ஒழுக்கம் (28) | தீவினையச்சம்(21) | மெய்யுணர்தல் (36) | ஒப்புரவறிதல் (22) | வாழ்க்கை துணை நலம்(6) |
| 3 | நீத்தார் பெருமை(3) | அருளுடைமை(25) | கல்லாமை(41) | கேள்வி(42) | பெரியாரைத் துணைக்கோடல்(45) | புகழ் (24) | செய்ந்நன்றியறிதல்(11) |
| 4 | அறன் வலியுறுத்தல்(4) | வாய்மை(30) | குற்றங்கடிதல்(44) | தெரிந்து தெளிதல்(51) | கொடுங்கோன்மை(56) | தவம் (27) | புலால் மறுத்தல்(26) |
| 5 | மக்கட்பேறு (7) | இறைமாட்சி(39) | இடனறிதல்(50) | ஒற்றாடல்(59) | கண்ணோட்டம்(58) | நிலையாமை (34) | வெஃகாமை(18) |
| 6 | அன்புடைமை (8) | கல்வி(40) | தெரிந்து வினையாடல்(52) | வினைத்தூய்மை(66) | ஆள்வினையுடைமை (62) | துறவு (35) | வெகுளாமை(31) |
| 7 | விருந்தோம்பல் (9) | தெரிந்து செயல்வகை(47) | செங்கோன்மை(55) | பழைமை(81) | அமைச்சு(64) | அவா அறுத்தல் (37) | ஊழ்(38) |
| 8 | இனியவை கூறல்(10) | சுற்றந்தழால்(53) | வெருவந்த செய்யாமை(57) | தீ நட்பு(82) | பொருள் செயல்வகை(76) | வலியறிதல் (48) | அறிவுடைமை(43) |
| 9 | பயனில சொல்லாமை (20) | மடியின்மை(61) | சொல்வன்மை(65) | பேதைமை(84) | கூடா நட்பு(83) | காலமறிதல் (49) | சிற்றினஞ்சேராமை(46) |
| 10 | ஈகை (23) | இடுக்கண் அழியாமை(63) | அவையறிதல்(72) | புல்லறிவாண்மை(85) | பகை மாட்சி(87) | பொச்சாவாமை (54) | வினைத்திட்பம்(67) |
| 11 | கள்ளாமை (29) | வினை செயல்வகை(58) | படைச்செருக்கு(78) | இகல்(86) | நன்றியில் செல்வம்(101) | குறிப்பறிதல் (71) | தூது(69) |
| 12 | இன்னா செய்யாமை(32) | அவையஞ்சாமை(73) | நட்பு(79) | குடிமை(96) | குடிசெயல் வகை(103) | படை மாட்சி (77) | உட்பகை (89) |
| 13 | கொல்லாமை (33) | நாடு(74) | நட்பாராய்தல்(80) | சான்றாண்மை(99) | நல்குரவு(105) | பகைத்திறம் தெரிதல் (88) | மன்னரைச் சேர்ந்தொழுகல் (70) |
| 14 | ஊக்கமுடைமை (60) | அரண்(75) | மானம்(97) | உழவு(104) | இரவு (106) | மருந்து (95) | கள்ளுண்ணாமை (93) |
| 15 | பெரியாரைப் பிழையாமை (90) | பெருமை (98) | பண்புடைமை (100) | நாணுடைமை (102) | கயமை (108) | இரவச்சம் (107) | சூது(94) |
| மொத்தம் | 15 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 |

த.உதயச்சந்திரன்
அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

(ஒ.) செந்தமிழ்செல்வி
பிரிவு அலுவலர்
22/3/17